மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுராந்தகம்.

அ.வ.எண். 144/2017

இந்த நீதிமன்றத்து எழுத்தர் திரு.J.மோகன் என்பவரால் முறையாக பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 3ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10 வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் நாள் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். ரங்கநாதன் | வயது |
| த.பெ(அ) க.பெ | மதம் |
| கிராமம் | வட்டம் |

<u>பி.சா.3 முதல் விசாரணை</u>

10.04.2026

இந்த வழக்கில் நான் 3ம் பிரதிவாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணையை சத்திய பிராமாண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. 25.01.1952 தேதியில் தாயம்மாள் ஜானகியம்மாளுக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2. 02.05.1995** தேதியில் ஜானகியம்மாள் என்பவர் எனக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் அசல் பி.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**3. 08.07.2018** தேதியில் சர்வே எண்.**166/7** எ-ன் அ பதிவேடு மற்றும் புலவரைபடம் உண்மை நகல் பி.சா.ஆ.**3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**4. 26.07.2018** தேதியில் நான் மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் தாக்கல் செய்த மேல்முறையீடு மனு அதனுடன் மனு பெற்றுக் கொண்டதற்கான வருவாய் கோட்டாட்சியர் அலுவலக முத்திரை அலுவலக நகல் பி.சா.ஆ.**4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**5. 05.10.2018** தேதியில் மதுராந்தகம் கோட்டாட்சியர் அவர்கள் என்னுடைய மனுவின் நகலை மதுராந்தகம் வட்டாட்சியர் அவர்களுக்கு விசாரணைக்காக அனுப்பிய கடிதம் அசல் பி.சா.ஆ.**5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**6. 15.04.2024** தேதியில் நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிபேராணை மனு எண்.**10108/2024** ல் பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல் பி.சா.ஆ.**6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**7**. **30.05.2024** தேதியில் மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் அனுப்பிய விசாரணை அழைப்பாணை அசல் பி.சா.ஆ.**7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**8**. **22.07.2024** தேதியில் மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் எனக்கு அனுப்பிய கடிதம் அசல் பி.சா.ஆ.**8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

( வாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)